கட்சியைச் சார்ந்தவர்கள் பேசுபவர்களின் எண்ணிக்கையைப் பெருக்காமல், அவர்கள் பேசும் வாய்ப்பை அதிகரித்துக்கொண்டு பேசுவது நல்லது. 19-ம் தேதி வைத்துக்கொள்வதற்கு ஆட்சேபணை இல்லை. ஆகவே, 4 நாட்கள் விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே விவாதத்திற்கே நேரம் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டருக்கு எங்கே நேரம் இருக்கிறது?

THIRU K.M. SUBRAMANIAM : On a point of Order, Sir. Amendments should not be contrary to the resolution. Amendments should be according to the resolution. I would like to have your order whether the amendments moved by Thiru K. T. K. Tangamani and Thiru A. R. Marimuthu can be admitted because they are negations of the resolution. Are those amendments in order? I want your ruling.

THIRU S. KANDAPPAN : I would like to make a submission. I have been closely following the amendments moved by the hon. Members. I am afraid Dr. Hande's amendment is not in order.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ரொம்ப கரெக்டாக இருக்கிறது.

(ஆ) கோட்டையில் தேசியக் கொடி கிழிந்து பறப்பது குறித்து

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் நேரடியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் எழுப்பும் ஒழுங்குப் பிரச்னை வேறு.

The point I am going to raise is within the cognizance of the Hon. Speaker.

சார், இங்கே கோட்டையிலே நம்முடைய தேசியக் கொடியானது பறக்கிறது. இன்றைக்கு நான் பார்க்கின்றபோது, அந்தக் கொடி கிழிந்து பறக்கிறது. இது யாருடைய பொறுப்பு? இந்த மாதிரி கோட்டையில் பறப்பது நல்லதல்ல. அதில் நேரடியாக உங்களுக்குப் பொறுப்பு இருக்கிறதோ இல்லையோ, ஒரு கிழிந்த கொடி

பறக்கும் அளவுக்கு சென்னை நகரத்தில் கோட்டையில் இருப்பது நல்லதல்ல. யார் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களுக்குக் கூறி அதை முறைப்படுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராணுவத்தின் பொறுப்பில் இருக்கிறது. அதை நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தீர்மானமும், திருத்தங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள் ளப்படுகின்றன.

6. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து—தொடர்ச்சி.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கின்ற மாநில சுயாட்சித் தீர்மானம், மத்திய—மாநில உறவுகள் பற்றி ராஜமன்னார் குழு அளித்த பரிந்துரை, இவைகள் மீது தமிழக அரசு கொண் டிருக்கும் கருத்து குறித்த மாண்புமிகு முதலமைச்சர் தீர்மானத் திற்கு ஆதரவு தெரிவிக்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களை இந்த மேலான மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த மன்றம் எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி களைச் சந்தித்து இருக்கிறது என்றாலும், வரலாற்றில் என்றென்றும் அழியாத இடம் பெறத்தக்க அளவுக்குச் சில நிகழ்ச்சிகள் மட்டுமே தமிழக சட்டமன்றம் பெற்று இருக்கிறது. இன்றைய தினம் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியை இங்கே நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

தமிழக சட்டமன்றம் எதை விவாதிக்கிறது, மாநில சுயாட்சி பற்றி எத்தகைய கருத்துக்களைச் சொல்கிறது, உறுப்பினர்களும் எத்தகைய விவாதங்களை தருகிறார்கள், எத்தகைய நியாயங்களைச்